# கோலாகல கொண்டாட்டம்!

"மகாசிவராத்திரி அன்று நிலவும் இயற்கை சக்திகள் உங்கள் இயல்பின் உச்சநிலையை நீங்கள் அடைவதற்கான உந்துதலை அளிக்கிறது. இந்த இரவு உங்களுக்கு எழுச்சியை ஏற்படுத்தட்டும்!" என்கிறார் சத்குரு.

மகாசிவராத்திரி இரவின் சிறப்பு, அதன் கோள்களின் அமைப்புதான்! மிக சக்திவாய்ந்த அன்றைய இரவில் விழிப்பாய் தனது முதுகுத்தண்டை நேராக வைத்திருப்பவர்களுக்கு உடல் மற்றும் ஆன்மிகம் சார்ந்த அசாத்தியமான பலன்கள் கிடைக்கின்றன.

கோவை 'ஈஷா' யோக மையத்தில் ஒவ்வொரு ஆண்டும் மகாசிவராத்திரி வெகு விமர்சையாகக் கொண்டாடப்படுகிறது. ஆத்மார்த்தமான ஆன்மிக அனுபவங்கள் நமக்கு மலர்வதற்கான சூழ்நிலையை அது ஏற்படுத்திக் கொடுக்கிறது. தற்போது அங்கு 25-வது ஆண்டாக மகாசிவராத்திரி விழா கொண்டாடப்படுகிறது.

இரவு முழுக்க நீளும் இந்த கொண்டாட்டத்தின் சில சிறப்பு அம்சங்கள் இதோ...

* சத்குருவுடன் நள்ளிரவு தியானம்.
* பிரபல இசைக் கலைஞர்களின் நிகழ்ச்சிகள்.
* மகா அன்னதானம்.

### ருத்ராட்ச பிரசாதம்

ஆதியோகி சிலைக்கு ஓராண்டாக அணிந்திருந்த ருத்ராட்சம், புனிதமான மகாசிவராத்திரி நாளன்று 'ஈஷா' மையத்துக்கு வருபவர்களுக்கு பிரசாதமாக வழங்கப்படும். இதனை வீட்டுப் பூஜை அறையில் வைக்கலாம். விசேஷ நாட்களில் அணிந்துகொள்ளலாம். இந்த ருத்ராட்சம் சிவன் அருள் பெற உதவும்.

### சர்ப்ப சூத்திரம்

மகாசிவராத்திரி அன்று 'ஈஷா' மையத்துக்கு நேரில் வருபவர்களுக்கு, செம்பில் செய்த சர்ப்ப சூத்திரம் பிரசாதமாக அளிக்கப்படும். இதை இடது கை மோதிர விரலில் அணியலாம். இது ஆயுட்காலத்தை பெருக்கும், ஒருவருக்குள் சமநிலையை உண்டாக்குகிறது என்கிறார்கள்.

### பிரதட்சணம்

ஆதியோகியின் அருள் பெற்று, ஒருவர் முக்தி நோக்கிச் செல்ல 'ஆதியோகி பிரதட்சணம்' உற்ற துணையாகும்.

### அன்னதானம்

மகாசிவராத்திரியில் பக்தர்கள் ஆதியோகிக்கு அரிசி அர்ப்பணிக்கலாம். அன்று கூடும் லட்சக்கணக்கான மக்களுக்கு இந்த அரிசி அன்னதானமாகும்.

### கோலாகலம்

இவ்வருட விழாவை மாபெரும் திருவிழாவாக்கி அழகூட்ட கிராமப்புற இசை மற்றும் நடனங்கள், கலைப் பொருள் அங்காடிகள், கால்நடைக் காட்சி, தலைப்பாகை கட்டுதல், வீதி நாடகங்கள், பல மாநில உணவு அரங்கங்கள், பல்வகை சேலை உடுத்தும் பயிற்சி என பல நிகழ்ச்சிகள் பிரமாண்டமாய் அரங்கேறுகின்றன.

தெய்வீகத்துடனான இந்த இரவில், அன்பிற்குரியவர்களுடன் கலந்துகொள்வது ஆனந்த அனுபவம்! முன்னதாக மார்ச் 1 முதல் 3-ந்தேதி வரை 'யக்ஷா' தெய்வீக இசை மற்றும் நாட்டியத் திருவிழா நடைபெறும்.





சிவ வழிபாடு

# மகாசிவராத்திரி மகத்துவம்!

இந்து மதத்தில் சிவபெருமானுக்கு பல வடிவங்கள், பெயர்கள் கொடுத்து வழிபடுகிறோம். அவற்றின் அம்சங்கள் என்னென்ன என்பதை இதில் விளக்குகிறார் சத்குரு...

**சகலமும் அறிந்த அறியாதவன்**

சிவனை 'போலேநாத்' என்றும் அழைக்கிறார்கள். 'அறியாதவன்' என்று இதற்கு அர்த்தம். அதாவது, அறியாமையின் கடவுள். 'ஒன்றும் தெரியாதவன்' என... சகலமும் அறிந்த தெய்வத்தை அழைப்பது உங்களுக்கு பிடிக்காது. அவன் அனைத்தும் தெரிந்தவனாய் இருக்கிறான் என்பது உங்கள் நம்பிக்கை.

உண்மையில் ஞானேஷ்வரனாகவும் இருக்கிறான். அது அவனுடைய மிகச் சிறிய அம்சம். இந்தப் பிரபஞ்சத்தில் பரந்து விரிந்த பெரும்பான்மையான பகுதி வெறுமையாய் இருக்கிறது. அதனாலேயே இருளின் கடவுள், வெறுமையானவன், அறியாமையின் கடவுள் என்று அவனை அழைக்கிறோம்.

அறியாதவற்றை ஆராய்ந்தால்தான் அறிவு கிடைக்கும். உங்களுக்குத் தெரிந்ததை தோண்டிப் பார்த்தால், புதிதாய் ஏதோ பிறப்பதற்கான சாத்தியம் குறைவு. செய்ததையே மறுசுழற்சி செய்வீர்கள். அறியாதவற்றை ஆராயும்போது அறிதல் பிறக்கும். முடிவில்லா அறிவினை இருளில் இருந்து நம்மால் பெற முடியும்!

**நடராஜர் சிலை ஏன்?**

நடனத்தின் இறைவனாய் விளங்குபவன் நடராஜர். அணு தகர்ப்பு போன்ற நிகழ்வுகள் நிகழும் சுவிட்சர்லாந்தில் உள்ள ஐரோப்பிய அணு ஆராய்ச்சி (CERN) மையத்துக்கு நான் சென்றபோது... அங்கே நுழைவாயிலில் நடராஜர் சிலை உள்ளதைக் கண்டேன். அவர்கள் மேற்கொண்டுள்ள திட்டத்தோடு அடையாளப்படுத்தக் கூடிய ஒரு வடிவத்தை மனிதக் கலாசாரத்தில் காணாததால், நடராஜர் சிலையை ஸ்தாபித்துள்ளனர்.



சத்குரு

நடராஜர்... படைத்தலின் எழுச்சியை குறிக்கிறார்; பிரபஞ்சத்தின் நிச்சலனத்தில் இருந்து தன்னை சுயமாய் உருவாக்கிக் கொண்ட படைத்தலின் நடனம் அது. அதனால், அவ்விடத்தில் 'பைரவி யாத்னா' என, அழைக்கப்படும் ஒரு செயல்முறையை சிவன் உருவாக்கினார். விழிப்புணர்வில் வாழ்ந்தவர்களுக்கும், பிரதிஷ்டை செய்யப்பட்ட இடத்தில் வாழ்பவர்களுக்கும் அவர்களது வாழ்வின் கடைசி 40 நொடிகள் முற்றிலும் வித்தியாசமான அனுபவமாய் இருக்கும். விபத்திலோ, வயோதிகத்தாலோ, கொலையினாலோ, தற்கொலையினாலோ ஒருவர் இறக்க நேரிடும்போது கடைசி 40 நொடிகள் மிக வேகமாய் கழியும்.

ஒருவர் தன் வாழ்நாள் முழுதும் விழிப்புணர்வு இல்லாமல் வாழ்ந்திருக்கலாம். பல ஜென்மங்கள் விழிப்புணர்வு தொடாத நிலையில் இருந்திருக்கலாம்... அறியாமையில் விசும்பி இருக்கலாம். ஆனால், இந்தக் கடைசி 40 நொடிகளில் குறிப்பிடும்படியான விழிப்புணர்வு நிலையில் இருந்துவிட்டால், அத்தனை கர்மங்களையும் ஒருசேர கழித்து...கரைந்துவிடலாம்.

அதனால், இன்று காசியில் உள்ள மணிகர்ணிகா படித்துறைக்கு அருகே காலபைரவர் முன்னிலையில் 'பைரவி யாத்னா' நடைபெறுகிறது. மரணம் எய்தியவரை மிக அழகாக, 'காலமாகிவிட்டார்' என்று சொல்கிறது தமிழ் மொழி. ஏனெனில், உயிர் என்று



சொல்லும் அம்சத்துக்கும், இறப்புக்கும், காலத்துக்கும் தொடர்பு இருக்கிறது. நம் வாழ்வின் அடிப்படையும், இறப்பின் அடிப்படையும் காலமே!

**அர்த்தநாரீஸ்வரன்**

பொதுவாக .சிவன், உச்சகட்ட ஆண்தன்மையின் அடையாளம். ஆனாலும், அவனது அர்த்தநாரீஸ்வர ரூபத்தில், சரி பாதி பெண். ஒருவருக்குள் ஆண்தன்மையும் பெண்தன்மையும் ஒன்றிணைந்தால் நிலையான பரவசத்தில் இருப்பார். அதையே புறவழியில் முயன்றால் அது நிலைப்பதில்லை. அதனால் ஏற்படும் துன்பங்கள் அனைத்தும் முடிவில்லா நாடகமே!

ஆண்தன்மை, பெண்தன்மை என்று சொல்லும்போது... நாம் ஆணையோ பெண்ணையோ குறிப்பிடவில்லை. ஒரு ஆணும், பெண்ணும் இணைவதற்கான ஏக்கம் அல்ல இது! வாழ்வின் இருவேறு பரிமாணங்கள் இணைவதற்கான அம்சம். உள்நிலையில் இதை வெற்றிகொள்ள முடிந்தால், வெளிச்சூழ்நிலை நூறு சதவிகிதம் உங்கள் தேர்வுப்படி நிகழும். இல்லாதபட்சத்தில், வெளிச்சூழ்நிலை நிர்ப்பந்தத்தின் பெயரிலேயே நடைபெறும்.

உங்களது உச்சபட்ச சாத்தியத்துக்கு நீங்கள் வளர்ந்தால்... பாதி ஆணாகவும், பாதி பெண்ணாகவும் இருப்பீர்கள் என்பதையே இது சித்திரிக்கிறது. திருநங்கை அல்ல! முழுமையான ஆண் - பெண். இப்படி இருக்கும்போது மட்டுமே பரிபூரண உயிராக இருப்பீர்கள்.

**காலபைரவர்**

சிவனது அகோர ரூபம் காலபைரவர். காலத்தை அழிக்கும் நிலையில் இருக்கிறார். அதனைக் கடந்தவர் என்பதால் அப்பெயர். பொருள்தன்மை சார்ந்த அனைத்தும் கால, நேரம் என்ற கட்டுபாடுகளுக்குள் மட்டுமே வருகின்றன.

காலத்தை அழித்தால் அனைத்தும் முடிந்துவிடும்.'பைரவி யாத்னா' செய்வதற்காக பொருத்தமான வேடம் தரித்து காலபைரவராய் மாறினார் சிவன்.

மரணம் நம்மைத் தொடும் தருணத்தில், பல ஜென்மங்கள் அதிதீவிரமாய், பயங்கர வலியுடன், வேதனையுடன் சில விநாடிகளுக்குள் நிகழும். அதன்பின் கடந்த காலம் குறித்த எந்தவொரு அம்சமும் உங்களுக்குள் நிலைக்காது. உங்கள் 'மென்பொருளை' அழிப்பது, வலி தரும் விஷயம்!

**ஆதியோகி**

யோக பாரம்பரியத்தில் சிவனை கடவுளாக வழிபடுவதில்லை. அவன் ஆதியோகி. அதாவது முதல் குரு. இவனிடம் இருந்துதான் யோக அறிவியல் தோன்றியது. தட்சிணாயன காலத்தில் வரும் முதல் பவுர்ணமி 'குரு பவுர்ணமி' என அழைக்கப்படுகிறது. இந்த நாளில்தான் அவன் ஆதிகுருவாய் மாறி, 'சப்தரிஷி' என அழைக்கப்படும் தன் ஏழு சீடர்களுக்கு யோக அறிவியலை வழங்கத் தொடங்கினான்.

இது மதங்களுக்கு முன்னோடியானது. மக்கள் பிரிவினைவாதத்தால் மனிதர்களைப் பிரிப்பதற்கு முன்னரே அவன் வளரவும், மாற்றம் காணவும் தேவையான அத்தனை கருவிகளும் வழங்கப்பட்டன. அந்தத் தொழில்நுட்பத்தின் நவீன நுட்பங்களும், அதன் நயமும் நம்ப முடியாததாய் உள்ளன.

'அந்தக் காலத்து மக்கள் அத்தனை நயமானவர்களாய் இருந்தார்களா?' என நீங்கள் கேட்பது... பொருந்தா கேள்வியாக இருக்கும். ஏனெனில், இது எந்தவொரு கலாசாரத்தில்... எண்ண ஓட்டத்தில் இருந்தும் வரவில்லை. உள்ஞானத்தில் தோன்றியது. அவனுள் இருந்து வெளிப்பட்டது.

அவன் சொன்னதில் ஒரு விஷயத்தைக்கூட உங்களால் மாற்ற முடியாது. காரணம், அதை அத்தனைப் புத்திசாலித்தனமாக, அழகாக சொல்லி இருக்கிறான்.

**நெற்றிக்கண்**

பொருள்தன்மை அல்லாத ஒன்றைப் புரிந்துகொள்ள நினைத்தால், உள்முகமாய் திரும்புவதுதான் அதற்கு ஒரே வழி. உள்முகமாய் திரும்ப ஒரு கண் இருந்தால், அதனை மூன்றாவது கண் என்கிறோம்.

நம் பாரம்பரியத்தில் நெற்றியில் அந்தக் கண் அமைந்திருப்பதாக சொல்வது ஏன்? கிரகித்துக்கொள்ளும் திறனோடு தொடர்புடைய 'ஆக்ஞா சக்கரம்' நமது நெற்றியில் அமைந்திருக்கிறது. முன்பூர், 'ஈஷா' யோக மையத்தின் அடையாளம் ஒரு வட்டம். அதற்குள் முக்கோணம். அதன் நடுவே மற்றொரு வெள்ளை வட்டம்.

இந்நாட்களில் நம் மக்கள் அதன் பயன்பாட்டை மெதுவாகக் குறைத்துவிட்டனர். புருவ மத்தியில் இருக்கும் 'ஆக்ஞா சக்கரம்', உள்முக பயணத்தை வழங்குகிறது. 'ஈஷா' உங்களை உள்முக பயணமாய் அழைத்துச் செல்வதால் இந்த அம்சத்தை வைத்திருந்தோம்.

அனைவரது வாழ்விலும் மூன்றாவது கண் என்பது சாத்தியமாய் மட்டுமே இருக்கிறது. அனுபவ உண்மையாய் ஆவதில்லை! அது நமக்கு அனுபவப்பூர்வமான உண்மையாக அமைய வேண்டும் என்றால், அதை மெள்ள மெள்ள வளர்க்க வேண்டும். அதற்காக பயிற்சிகள் செய்ய வேண்டும்.

'ஈஷா' யோக மையத்தில் 'சம்யமா' போன்ற உயர் வகுப்புகளில் பங்கேற்பாளர்கள் 8 மணி நேரம் மிகச் சுலபமாய் கண்களை மூடி அமர முடிகிறது. மூன்றாவது கண் தூண்டப்படாமல் இது சாத்தியமே இல்லை.

**மதமல்ல...**

சிவன் என நாம் அழைப்பது உச்சகட்ட கிரகிப்புத் திறனை! இந்த அர்த்தத்தில்தான் 'ஈஷா'வும் மகாசிவராத்திரியைக் கொண்டாடுகிறது. மக்களின் கிரகிப்புத் திறனை குறைந்தபட்சம் சிறு துளியாவது உயர்த்த முடியும் என்கிற எண்ணத்தில்தான் இதனை அணுகுகிறோம். இதுவே சிவன்... யோகா. இது மதமல்ல... மனதின் உள்நிலையிலான புரட்சி!

வெறுமனே கண் விழித்திருக்கும் ஒரு நாளாக இல்லாமல் அதிதீவிர விழிப்புணர்வும், உயிரோட்டமும் உங்களுக்குள் ஊற்றெடுப்பதாக இது அமைந்திட வேண்டும். இயற்கை வழங்கும் இந்த இணையில்லா வரத்தை நீங்கள் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்பதே என் ஆசையும், ஆசியும்!

'ஷிவா' எனும் சொல்லின் வீரியத்தையும், இணையில்லா தீவிரத்தையும், அழகையும், பேரானந்தத்தையும் உணர்வீர்களாக... அகமகிழ்வீர்களாக!

**பின்குறிப்பு:** மகாசிவராத்திரி தினத்தில் (மார்ச் 4) விழிப்பாய், முதுகுத்தண்டை நேராய் வைத்திருக்கும் ஒருவருக்கு உடல் சார்ந்த மற்றும் ஆன்மீக ரீதியான பலன் அபரிமிதமாகக் கிடைக்கிறது.

கோவை வெள்ளியங்கிரி மலைச்சாரலில் அமைந்துள்ள 'ஈஷா' யோக மையத்தில், ஆதியோகியின் திருவருளுடன் தெய்வீக இரவான மகாசிவராத்திரியைக் கொண்டாட உங்களை அன்போடு அழைக்கிறேன்.

**நேரம்:** திங்கள் மாலை 6 மணி முதல் மறுநாள் செவ்வாய்க்கிழமை காலை 6 மணி வரை!

## 2 மீட்டர் உயர நடராஜர்!

'அவனின்றி ஓர் அணுவும் அசையாது' என்று திருமூலரும், 'பரமகுருவாய் அணுவில் அசைவாய்' என்று அருணகிரிநாதரும் பாடி... ஈசனின் நடனத் திருக்கோலத்துக்கும், இந்த பிரபஞ்ச இயக்கத்துக்கும் தொடர்பு உண்டு என்பதை வெளிப்படுத்தினர்.

விஞ்ஞான உலகம்கூட அதை ஏற்றுக்கொண்டுள்ளது. பிரபல இயற்பியல் மற்றும் அணு விஞ்ஞான மேதையான ப்ரிட்ஜாப் காப்ரா தனது ஆய்வு நூலில் இதை விரிவாகச் சொல்லி இருக்கிறார்.



மேற்கண்ட தத்துவத்தை நினைவுகூறுவது மற்றும் 1960 ஆண்டு முதல் ஐரோப்பிய அணு ஆராய்ச்சி நிலையத்துடன் ஏற்பட்ட நல்லிணக்கத்தை மேம்படுத்தும் வகையில் இந்திய அரசாங்கம் 2004 ஜூன் 4-ந் தேதி, 2 மீட்டர் உயரம் கொண்ட நடராஜர் சிலையை அந்த அணு ஆராய்ச்சி மையத்துக்கு வழங்கியது. அதன் பிரதான இடத்தில் அதை இன்றும் காணலாம்!

